# அரச வருமானம்/ அரசிறை



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

## அரச வருமானம்/அரசிறை

**அரச வருமானத்தின் மூலங்கள் இரண்டாகும்**

1.வரி வருமானம்
2.வரியல்லாத வருமானம்

### அரசின் வரிவருமானம்

ஒருசட்டமூலத்தின்கீழ் அரசாங்கத்திற்கு கட்டாயமாக செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவை வரி என்பர். வரிகளை இரண்டாக பிரிக்கலாம்

1.நேர்வரி
2.நேரில்வரி

| நேர்வரி | நேரில்வரி |
| --- | --- |
| 1.வரி இறுப்பாளர்கள் வரிச்சுமையினை முழுமையாக தாமே தாங்கிக்கொள்ளுதல்<br>2.வரிப்பெயர்ச்சி இல்லை<br>3.வருமானம் சொத்துக்கள் மீது அறவிடப்படுபவை<br>E.g:- தனியாள் வருமானவரி | 1.வரி இறுப்பாளர்கள் வரிச்சுமையினை பகுதியாக/முழுமையாக இன்னொருவருக்கு சுமத்தக்கூடியதாகக்காணப்படல்<br>2.வரிப்பெயர்ச்சி உண்டு<br>3.உற்பத்தி வர்த்தகசெயற்பாடுகள் மீது அறவிடப்படுபவை<br>E.g:- பெறுமதிசேர்வரி இறக்குமதி வரி |



தொகுப்பு:- திரு.ச.ஜெயகுமார், பொருளியல்ஆசிரியர்,யா/வயாவிளான் மத்தியகல்லூரி
கணினிவடிவமைப்பு:- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வரிவிதிப்பின் நோக்கங்கள்

01 மொத்தக்கேள்வியிலும் மொத்தநிரம்பலிலும் தாக்கதைச்செலுத்துதல்

02 பொதுப்பொருட்களையும் சமூக நலப்பொருட்களையும் வழங்குதல்

03 வர்த்தக சகடவோட்டத்தளம்ப லைக்கட்டுப்படுத்தல்

04 வருமான மற்றும் செலவுப்பரம்பலில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்

05 வளப்பகிர்வினை வினைத்திறனாக்கல்

06 உயர்ந்த சமுகச்செலவை உண்டாக்கும் தீங்கானபண்டங்களின் நுகர்வைக்கட்டுப்படுத்தல்



$$\text{சராசரி வீதம்} = \frac{\text{மொத்தவரித்தொகை}}{\text{வரியின் அடிப்படை பெறுமானம்}} \times 100$$

$$\text{எல்லைவரி வீதம்} = \frac{\text{மொத்தவரிப்பண மாற்றம்}}{\text{வரியின் அடிப்படை பெறுமான மாற்றம்}} \times 100$$

தொகுப்பு:- திரு.ச.ஜெயகுமார், பொருளியல்ஆசிரியர்,யா/வயாவிளான் மத்தியகல்லூரி
கணினிவடிவமைப்பு:- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# வரி அறவிடப்படும் விகிதங்களுக்கமைய வரிகளை வகைப்படுத்தல்

## 1 விருத்திமுறை வரி

வரியின் அடிப்படை (வருமானம் சொத்து) விரிவாக்கமடையும்போது அறவிடப்படும் வரிவீதமும் அதிகரித்துக்கொண்டு செல்லுதல் விருத்திமுறை வரி என்பர் இங்கு வரியின் அடிப்படை அதிகரிக்கும்போது எல்லை வரிவீதமும் அதிகரித்துச்செல்லும்


Eg:- தனியாள்வரி




## 2 விகிதசமவரி/சமவிகிதவரி

வரியின் அடிப்படை விரிவாக்கமடையும்போது அறவிடப்படும் வரிவீதமும் மாறாதிருத்தல் விகிதசமவரி எனப்படும். இங்கு வரியின் அடிப்படை அதிகரித்தச்செல்லும்போது எலலைவரிவீதம் மாறாதிருக்கும்


Eg:- பெறுமதிசேர்வரி




## 3 தேய்வுமுறைவரி/ ஒடுங்குமுறைவரி

வரியின் அடிப்படை விரிவாக்கமடையும்போது அறவிடப்படும் வரிவீதமும் வீழ்ச்சியடைந்து செல்லுதல் தேய்வுமுறை வரி எனப்படும் இங்கு வரியின் அடிப்படை அதிகரித்தச்செல்லும்போது எல்லைவரிவீதம் வீழ்ச்சியடைந்து செல்லும்

Eg:கலால் தீர்வை




தொகுப்பு:- திரு.ச.ஜெயகுமார், பொருளியல்ஆசிரியர்,யா/வயாவிளான் மத்தியகல்லூரி
கணினிவடிவமைப்பு:- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# வரித்தாக்கம்




வரி விதிக்கப்படும்போது அதன் சுமை பொருளாதாரத்தின் வெவ்வேறு அலகுகள்மீது எவ்வாறு சென்றடைகிறது என்பதனை ஆராய்தல் வரிவிதித்தலின் தாக்கம் எனப்படும். இறுதியாக வரிச்சமை எவரால் பொறுத்துக்கொள்ளப்படுகின்றது என்பதனை வரித்தாக்கம் வெளிப்படுத்துகின்றது

**வரித்தாக்கம் இருவகைப்படும்**

1.**சட்டரீதியான வரித்தாக்கம்**



நிர்வாக ரீதியில் வரி யாரால் செலுத்தப்படுகின்றது என்பதனை சட்டரீதியான வரித்தாக்கம் குறிக்கும்.இங்கு அரசிற்கு சட்டரீதியாக எவர் வரியினை செலுத்துகிறார் என்பதனைக்குறிக்கும்.

2.**பொருளாதார ரீதியான வரித்தாக்கம்**



வரிச்சுமையினை நடைமுறையில் யார் தாங்குகிறார்கள் என்பதனை பொருளாதார ரீதியான வரித்தாக்கம் குறிக்கும். பொருள்சேவைகள் மீது வரி அறவிடப்படும்போது வரிச்சுமையின் ஒருபகுதியை நுகர்வோரும் ஒருபகுதியை விற்பனையாளரும் தாங்கிக்கொள்வர்.

## வரிப்பெயர்ச்சி


வரிச்சுமையை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாற்றுதலை வரிப்பெயர்ச்சி என்பர். இதில் இரண்டு விடயங்கள் உண்டு

1.**முன்னோக்கிய வரிப்பெயர்ச்சி**

பண்ட உற்பத்தியாளர் மீது விதிக்கப்படும் வரியின் சுமையின் பகுதியாக/முழுமையாக நுகர்வோர் மாற்றுதல் முன்னோக்கிய வரிப்பெயர்ச்சி எனப்படும்

**2.பின்னோக்கிய வரிப்பெயர்ச்சி**

பண்ட உற்பத்தியாளர் மீது விதிக்கப்படும் வரியின் சுமையின் பகுதியாக/முழுமையாக சராசரிச்சேவை வழங்குனர்களுக்கு மாற்றுதல் பின்னோக்கிய வரிப்பெயர்ச்சி எனப்படும்




தொகுப்பு:- திரு.ச.ஜெயகுமார், பொருளியல்ஆசிரியர்,யா/வயாவிளான் மத்தியகல்லூரி
கணினிவடிவமைப்பு:- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வரியின் மிகைச்சுமை

- வரி விதிப்பதன் காரணமாக பணரீதியான நுகர்வோர் விற்பனையாளர் தாங்கும் வரிச்சுமைக்கு மேலதிகமாக பொருளாதாரத்தில் ஏற்ப்படுத்தப்படும் தாக்கத்தினை மிகை வரி என்பர்

- பண்டங்கள் மீதான வரி விதிப்பின் காரணமாக அரசு திரட்டுகின்ற வரி வருமானத்திற்கு மேலதிகமாக நுகர்வோர் உற்பத்தியாளர் மிகையில் ஏற்படுகின்ற இழப்பினை மிகைவரிச்சுமை குறிக்கும்

மிகைவரிச்சுமை = வரியினால் ஏற்ப்பட்ட நுகர்வோர் உற்பத்தியாளர் மிகைஇழப்பு- அரசின் வரிவருமானம்




### வரிவிதிப்பின் தத்துவங்கள் (சிறந்த வரியொன்றின் விரும்பத்தக்க பண்புகள்)

1.நியாயத்துவம்
2.இலகுதன்மை
3.நிச்சயத்தன்மை
4.சிக்கனத்தன்மை
5.எளிமைத்தன்மை
6.நெகிழ்தன்மை
7.நடுநிலைத்தன்மை

தொகுப்பு:- திரு.ச.ஜெயகுமார், பொருளியல்ஆசிரியர்,யா/வயாவிளான் மத்தியகல்லூரி
கணினிவடிவமைப்பு:- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வரியிடலின் சமத்துவம்

- வரிசெலுத்தும் ஆற்றலுக்கு ஏற்ப வரி அறவிடப்படுதல் வேண்டும் என்பதை வரியிடலின் சமத்துவம் குறிக்கின்றது
- இங்கு வரிப்பழு நியாயமானதாக காணப்பட வேண்டும்

**வரியிடலின் சமத்துவம் இருவகைப்படும்**

**1.கிடையான சமத்துவம்**
சமமான பொருளாதாரநிலையிலுள்ள நபர்கள் மீது சமமான வரிச்சுமை காணப்படல் வேண்டும் என்பதனை கிடையான சமத்துவம் குறிக்கின்றது

**2.குத்தான சமத்துவம்**
பொருளாதார ரீதியில் சமமற்ற நிலையிலுள்ள நபர்கள் மீது வரிச்சுமை சமமற்ற விதத்தில் காணப்படல் வேண்டும் என்பதனை குத்தான சமத்துவம் குறிக்கின்றது.

**இலங்கை அரசின் வரி வருமானக்கட்டமைப்பு**

| வரி வகைகள் | மொத்த வரியிறையில் சதவீதம் | | GDP யில் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2015 | 2016 |
| வருமானவரி | 19.4% | 17.7% | 2.4% | 2.2% |
| பெறுமதி சேர் வரி | 16.2% | 19.3% | 2.0% | 2.4% |
| கலால் தீர்வை வரி | 36.7% | 31.1% | 4.5% | 3.8% |
| இறக்குமதி தீர்வை | 9.7% | 10.7% | 1.2% | 1.3% |
| ஏனைய வரிகள் | 17.9% | 21.2% | 2.2% | 2.6% |
| மொத்த வரியரசிறை | 100% | 100% | 12.4% | 12.4% |

(மூலம் மத்திய வங்கி ஆண்டறிக்கை 2016)

- சமீப ஆண்டில் இலங்கை அரசுக்கு கூடுதலான வரி வருமானத்தினை கலால் தீர்வை பெற்றுக்கொடுத்துள்ளது
- **கலால் தீர்வை அறவிடப்படும் பண்டங்கள் வருமாறு**

1.புகையிலை/சிகரெட்
2.மதுபானம்
3.பெற்றோலியம்
4.மோட்டார் வாகனங்கள்





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வரியில்லாத அரசவருமானம்



**இலங்கை அரசின் வரியல்லாத வருமான மூலங்கள் வருமாறு**

1.மத்தியவங்கியின் இலாபங்கள்

2.அரசதுறை நிறுவனங்களின் இலாபங்களும் பங்கிலாபங்களும்

3.அரசின் சொத்து வருமானங்கள்

4.தேசிய லொத்தர் சபையின் இலாபங்கள்

5.கட்டணங்களும் நிர்வாக அறவீடுகளும்

6.குற்றங்களுக்குரிய தண்டப்பணம்

**இலங்கை அரசின் வருமானக்கட்டமைப்பு**

| விபரம் | மொத்த அரசிறையில் சதவீதம் | | GDP ல் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2015 | 2016 |
| வரி அரசிறை | 93% | 87% | 12.4% | 12.4% |
| வரியல்லாத அரசிறை | 7% | 13% | 0.9% | 1.9% |
| மொத்த அரசிறை | 100% | 100% | 13.3% | 14.2% |

(மூலம் மத்திய வங்கி ஆண்டறிக்கை 2016)

2016 ம் ஆண்டுத்தரவுகளின்படி அரச மொத்த வருமானத்தில் வரிஅரசிறை 87% ஆகவும் வரியல்லாத அரசிறை 13.% ஆகவும் காணப்பட்டது





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk